# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவராண்டு 2014
ஆவணி 24
ஜுலை 9
புதன் (9-9-1981)
நிறுவியது 1947
புத்தகம் 35
இதழ் 26
☎ 8164
விலை: சதம் 75


## திமுக-இந்திரா காங்கிரஸ் கூட்டாட்சி நடைபெறும்

# புதுவை மாநிலத்தில் பூரண ஹர்த்தால்!

## தி. மு. க. போராட்டம் தொடர்கிறது!

### செப்டம்பர் 12-இல் தமிழ் நாட்டில் ஹர்த்தால்!

இந்தியத் துணைக் கண்டத்தின் இரண்டாவது தமிழ் மாநிலமான புதுச்சேரி (பாண்டிச்சேரி) மாநிலத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறையைக்கண்டித்து செப்டம்பர்4ஆம் திகதி பரிபூரண ஹர்த்தாலும், கடையடைப்பும் நடைபெற்றது.

இதே சமயம் செப்டம்பர் 8ஆம் திகதி தமிழக அரசும் அனைத்துக் கட்சிகளும் மேற்கொள்ள விருந்த ஹர்த்தால் எதிர்வரும் சனிக்கிழமை (12.9.81) நடைபெறும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

தமிழகத் தலைநகரான சென்னையில் ஈழத்தமிழருக்காகத் திராவிட முன்னேற்றக்கழகம் நடத்திவரும்மறியல் போராட்டம் செப்டம்பர் 15ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும் என்றும் செப்டம்பர் 15ஆம் திகதி நடைபெறும் மறியற் போராட்டத்துக்கு திமுக தலைவரும் தமிழ்நாடுஎதிர்க் கட்சித்தலைவருமான கலைஞர் கருணாநிதி தலைமை தாங்குவார்என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது.

திமுகழகத்தைச் சேர்ந்த திரு. டி, இராமச்சந்திரன் முதலமைச்சராகப் பணியாற்றிவரும்புதுச்சேரிமாநிலத்தில் இலங்கையில் தமிழர்களுக்குஎதிராக இழைக்கப்படும் கொடுமைகளையும் வன்முறைகளையும் ஆட்சேபித்து ஒருநாள் ஹர்த்தால் 4.9.81 வெள்ளிக்கிழமையன்று வெற்றிகரமாகநடைபெற்றது.

அரசாங்க அலுவலகங்கள் தனியார்நிறுவனங்கள்பாடசாலைகள் கல்லூரிகள் நீதிமன்றங்கள் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு மா மூல்நிலைமைபாதிக்கப்பட்டதாக அகில இந்திய வானொலியின் செய்தி கூறியது, சினிமா தியேட்டர்கள் அனைத்தும் மூடப்பட்டன.

புதுவைமாநிலத்தில்திமுக கழகமும் இந்திரா காங்கிரசும் கூட்டரசாங்கம் நடத்தி வருவது தெரிந்ததே.

### வர்த்தகர்கள் உண்ணாவிரதம்

புதுச்சேரியிலுள்ளபழைய இரும்பு வியாபாரிகள் சங்கத்தினர். ஆகஸ்ட் 31 ஆம் திகதியன்று இலங்கைத் தமிழர்கள் இனக் கொலைக்கு ஆளாக்கப்படுவதைக் கண்

—4ம்- பக்கம் பார்க்க

## [சி]ங்களர்-தமிழர் பிரச்சினையில் இந்திராவின் மத்தியஸ்தம் எமக்கு வேண்டியதில்லை!

### ஜே. ஆர். ஜெயவர்த்தன பேட்டி!

இலங்கையில் தமிழருக்கும் சிங்களவருக்குமிடையேயிருந்துவரும் பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையாகும்:இதில்எந்த வெளிநாடும் தலையிடுவதை நாம் விரும்பவில்லை. தமிழர் சிங்களவர் பிரச்சினையில்சமரசம் ஏற்படுந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மத்தியஸ்தம் வகிக்க வேண்டியதில்லை,

இவ்வாறு 'இந்தியாருடே' என்ற ஆங்கில சஞ்சிகையின் ஆசிரியர் திரு. வெங்கட்ராமனுக்கு அளித்த பேட்டியொன்றில் சிறீலங்கா ஜனாதிபதி ஜே-ஆர், ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

அவரது பேட்டியைதமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் தினத்தந்தி,(31.8.81) மறு பிரசுரம் செய்துள்ளது, அதிலே அவர் கூறியிருப்பதாவது:—

இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் தமிழருக்குத் தனிநாடு வேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர்- அதற்காகப் போராட்டங்களும் நடத்துகின்றனர்.

ஆனால்என்னைப்பொறுத்தவரையில் பிரிவினை என்ற பேச்சுக்கே இலங்கையில் இடமில்லை. தொடர்ந்து தனிநாடுபோராட்டம்நடக்குமானால் அதில் ஈடுபடுபவர்கள்யாராகஇருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையெடுக்கப்படும்

இப்பிரச்சினையில் இந்தியப்பிரதமர் திருமதி காந்தி ஏதாவது உதவி செய்வதானால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடும்படி ஆலோசனை கூற வேண்டும். மற்றப்படிஇதில் இந்திராகாந்தியின் மத்தியஸ்தம் வேண்டுமென்று நாம் கூறமாட்டோம்-

''இலங்கையில் உள்ள தமிழர் விடுதலை இயக்கத்தைத் தடைசெய்யும்எண்ணம் எனக்கு இல்லை அந்த விடுதலை இயக்கத்தினர் இப்போது தமிழ் நாட்டில்தான் இருக்கிறார்கள்''

இவ்வாறு ஜே, ஆர். ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

# கொலை, கற்பழிப்பு, தீவைப்பு வன்முறையைத்தூண்டியவர் யார்

## ஜனாதிபதி ஜயவர்த்தன உண்மை கூறினார்!

"I regret that some members of my party have spoken in parliament and out side words that encourage violence and murders, rapes, and arson, that have been committed..."

I Must have reason to be proud of the party which. I am leader. If I cannot, it is better for me to retire from the leadership of this party and let those who believe that the harming of innocent people and property that has happened recently is the way to solve the problems that face this multiracial, multireligious, and multi- castesociety take over the leadership of the party....."

—PRESIDENT J.R. JAYAWARDENA.

(At the executive committee meeting of the U.N P. held at Ramakrishna ball, colombo on 4—9—81)

"...........நடந்துமுடிந்த வன்முறைகளையும், கொலைகளையும், கற்பழிப்புகளையும், தீ வைப்புக்களையும் தூண்டிவிடக் கூடிய வார்த்தைகளை எனது கட்சியைச்சேர்ந்த சில உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் பேசியுள்ள தற்காக நான் வருத்தமடைகிறேன்..."

நான் தலைமை தாங்கும் கட்சியைக் குறித்து நான் பெருமைப்படும் நிலைஇருக்க வேண்டும். அப்படி பெருமைப்படும் நிலையில் நான் இருக்கமுடியாவிடின், அண்மையில் நிகழ்ந்துள் ளது போல-- அப்பாவி மக்களைத் துன்புறுத்து வதிலும் அவர்களது உடமைகளுக்கு சேதமிழைப்பதிலும் மூலம்தான், பல இனங்கள்' பல மதங்கள், பல சாதிகளைக் கொண்ட இந்தச் சமுதாயத்தை எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கைகொண்டவர்கள் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்கும்படி விட்டுவிட்டு நான் தலைமைப் பதவி யிலிருந்து இளைப்பாறிவிடுவதே எனக்கு நல்லது............"

—ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன

(4-9-81 இல் கொழும்பு ராமகிருஷ்ணமண்டபத்தில் நடைபெற்ற யூ.என்.பி, செயற் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரையின் பகுதி)

## தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# பொலீசார் தகுந்த நடவடிக்கை எடுத்திருந்தால் மலையகத்தில்வன்முறைகளை தடுத்திருக்கமுடியும்

## இரத்தினபுரி மாநகரசபைக் கூட்டத்தில் சமசமாஜ உறுப்பினர் குற்றச்சாட்டு!

இரத்தினபுரி மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இரத்தினபுரி மாநகர மேயர் திரு. எம்.ஏ.குணதிலக பின்வருமாறு பேசியுள்ளார்,

இரத்தின புரியில் வன்செயல் தலைதூக்காது என்று நான் அசமந்தமாக இருந்து விட்டேன். என்றாலும் அடிமனம் நகரில் ஏதாவது நடக்கலாம் என எனக்குஅச்சுறுத்தியது,இதனால் இரத்தினபுரி எம்.பியுடன் தொடர்பு கொள்ள முயன்றேன்.அவர் வீட்டில் இருக்கவில்லை. அவரது துணைவியார் பேசினார்:

நான் அவரிடம் இன்றிரவு சில சமயம் இரத்தினபுரியில்வன்செயல் நிகழக்கூடிய அறிகுறி தோன்றியுள்ளது. இதற்கு நாம் ஏதேனும் செய்ய வேண்டும் எனக் கூறவே அவர் பிற்பகல் 3 மணிக்கு தமதுஇல்லம்வரும் படிகூறினார்-

நான் பிற்பகல் மூன்றரை மணியளவில் மாநகரசபை அங்கத்தவர்கள் ஜனாப் அப்துல் கபூர், சோமபாலநாணயக்கார மற்றும் சிலருடன் எம்.பியின் வீட்டுக்குச்சென்றேன்- அங்குஉதவிபொலிஸ் அதிகாரி திரு. ஹேரத் உட்படமற்றும்பலர்இருந்தனர்,

நான் நிலைமையைப்பொலிஸ்அதிகாரியிடம் கூறினேன். அதற்குஅவர்அப்படி ஒன்றும் நடைபெறாதுநடைபெற்றால் அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படும் என்றார்.

வீடுவந்த பின்பும் என் மனநிலை திருப்தி இன்மையால்தமிழ்க் கடைகளுக்கு சென்று கவனமாக இருக்கும்படி எச்சரிக்கை செய்து விட்டு வந்தேன்.

ஆனால் இரவு 8.30 மணிக்கு நான் சாப்பிட அமர்ந்தேன். அப்போது எனது இல்ல மின்சாரவிளக்குகள் அணைந்தன. வெளியே சென்றுபார்த்தபோது பல கடைகள் தீப்பற்றி எரிவதைக் கண்டேன்''

லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினர் திரு. மாரப்பன பேசுகையில் கூறியதாவது!

இரத்தினபுரிநகரில் ஆகஸ்ட் 13ஆம் திகதி ஆரம்பமான வன்செயலின்போது பொலீசார்தகுந்த நடவடிக்கை எடுத்திருந்தால் பெல்மதுளை காவத்தை பலாங்கொடை, இறக்குவானை, நிவித்திகலைப் பகுதிகளில் வன்செயல்கள் பரவாமல் தடுத்திருக்க முடியும்.

இரத்தினபுரிப் பகுதியில் பல இலட்சக்கணக்கான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. பல கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன- படுகொலைகள் நடைபெற்றுள்ளன. அப்பாவிமக்களான தோட்டத் தொழிலாளர்கள், பரிதாபமாகத் தாக்கப்பட்டுள்ளனர்-அவர்களது ஆடுமாடுகள், கோழிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இதன் சூத்திரதாரிகளை அறியவேண்டும்.'என்றார், (வீரகேசரி 2.9-81)

---

கொலைசெய்யப்பட்ட

## தனபதியின் குடும்பத்துக்கு சிறீலங்கா அரசிடம் நஷ்டஈடு கோருகிறார் எம்.ஜி. ஆர்.

சிறீலங்காவுக்குஉல்லாசப் பயணியாக வந்தபோது திசமகாராமையில் வெறியர்களால் கோரமாகக் கொலை செய்யப்பட்ட இந்தியப் பிரஜையும், திருவொற்றியூர் அண்ணா திமுக துணைச் செயலாளருமான திரு. சுப்பையா தனபதியின் குடும்பத்துக்கு உரிய நஷ்டஈடுவழங்குமாறு இந்திய வெளி விவகார அமைச்சர்திரு.நரசிம்மராவ் மூலம் சிறீலங்கா அரசிடம் தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. எம் ஜி- ராமச்சந்திரன் கோரியுள்ளார்.

---

## அகதிகளை இராணுவத்தினர் கொண்டு சேர்த்தனர்

காவத்தை, இரத்தின புரி. பலாங்கொடை போன்றபகுதிகளிலிருந்து, பொகவந்தலாவை ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயத்தில் அகதிகளாக வந்து தங்கியிருந்த தோட்டத் தொழிலாளர்களை மறுபடியும் அவர்களது முன்னைய வசிப்பிடங்களில் இராணுவத்தினர் கொண்டு சென்றுகுடி யேற்றியுள்ளனர்.

வீடு, உடமைகள் ஆகியவற்றை இழந்து காடுகள் ஊடாக ஓடி வந்து அகதிகளாக இங்கு தங்கியிருந்த மேற்படி தொழிலாளர்கள் இதுவரை தமது முன்னைய இடங்களுக்குசெல்லமறுத்து வந்துள்ளது தெரிந்ததே.

---

## நீர்கொழும்பில் 57 தமிழர் கடை நாசம்

நீர்கொழும்பில் தமிழர்களுக்குச் சொந்தமான 126 வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 45கடைகள் கொள்ளையடிக்கப்பட் டன. 12 கடைகள்பெற்றோல்குண்டுகள் வீசிக் கொளுததப்பட்டன.

மேற்படி தகவலை நீர்கொழும்பு எம்.பி-டென்சில் பெர்னாண்டோ வெளியிட்டுள்ளார்.

(தினபதி 2-9-81)

---

## தமிழீழம் தனியே பிரிந்தால் பணத்துக்கு என்ன செய்வீர்கள்? அமைச்சர் ஒருவரின் கேள்வி!

''-வடக்குகிழக்கு மாகாணங்களைப் பிரித்து இந்நாட்டில் தமிழீழம் அமைப்பதற்கு ஒரு சாரார் முனைந்துள்ளனர்,அ[illegible] படித் தமிழ் ஈழம் அமைக்கப்பட்டால் வடக்கு கிழக்[illegible] மாகாணங்களில் கிடைக்கும் பணம் தமிழ்ப் பகுதியை அ[illegible] விருத்திசெய்யப் போதுமானதா என்பதைச் சிந்தியுங்க[illegible] அதனால்தான் தேசிய மட்டத்தில் சேகரிக்கப்படும் பண[illegible] ணதை இலங்கையின் சகல மாவட்டங்களுக்கும் செலவிடு[illegible] றோம்.''

—அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா (வீரகேசரி2.9[illegible]

---

## கொழும்புத் தலைநகரில் அகதிகள் தொகை பெருகுகிறது

பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் அகதிகள் தொகை பெருகி வருகிறது. இங்கு தஞ்சமடைந்த அகதிகளில் சுமார் 100 பேரை வவுனியாவில் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் இரத்தினபுரியிலிருந்து 107 பேர் புதிதாக அகதிகளாக வந்து கொழும்பில் தஞ்சமடைந் துள்ளனர். இதே சமயம் ஏற்கெனவே அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள 173 தமிழர்களைஅவர்களுடைய விருப்பத்தின் பேரில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும் ஏற்பாடுகளை தமிழர் மறுவாழ்வுக் கழகம் செய்து வருகிறது.

இதே சமயத்தில் ஜனாதிபதி ஜே.ஆர், ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசிய இ.தொ.கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான், சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ள தொழிலாளர் மத்தியில் தொடர்ந்து பீதி நிலவி வருவதை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

---

## மத்திய அரசு பெற்றோர் அபிவிருத்திசபைபிள்ளைகள்

### பிரதமர் பிரேமதாசாவின் விளக்கம்!

''குறிப்பிட்ட ஒரு பெற்றோருக்கு பெரிய காணி ஒன்று சொத்தாக இருக்கிறது: அவர்களுக்கு 24 பிள்ளைகள்- அவர்களுடைய அந்த மாபெரும் சொத்தின் உரிமையாளர்களாக அந்தப் பிள்ளைகளை நியமிக்கிறார்கள், அவர்களுடைய காணியை தமது 24 பிள்ளைகளுக்கும் பகிர்ந்து கொடுக்கிறார்கள். பிள்ளைகளிடம் தமது சொத்தைஅவர்கள் கையளித்தாலும் பிள்ளைகள் நினைத்தபடி அவற்றை நிர்வகிக்க பெற்றோர் இடம் கொடுக்க மாட்டார்கள்- பெற்றோர்தமது ஆலோசனையின்படி தான் அவற்றை நிர்வகிக்க பிள்ளைகளுக்கு அனுமதி வழங்குவார்கள். பெற்றோர்அரசாங்கத்தையும்,பிள்ளைகள் அபிவிருத்தி சபைகளையும் குறிக்கும்''

—சிறீலங்காப் பிரதமர் பிரேமதாசா அபிவிருத்திச் சபைத் தலைவர்கள் மாநாட்டில் அளித்த விளக்கம் (தினபதி 2.9,81)

---

## புலோலி வழக்கில் நால்வர் விடுதலை

புலோலி வங்கிக் கொள்ளை வழக்கில் சந்தேக நபர்களாக பன்னிரண்டுபேர் மீது அரசு வழக்குத் தொடர்ந்திருந்தது. இவர்களில் சி. கமிலஸ் காலமாகிவிட்டார். கா. நல்லையா, நற்குணானந்தன், நித்தியானந்தன், ஆகியமூவரும் தலைமறைவாகிவிட்டனர். ஏனைய எட்டுப் பேர்களில்,ஜெயக்கொடி,ஹென்ஸ் மோகன். ஜெயம், சந்திர மோகன் ஆகிய நால்வரையும்,விசாரணையின் போதே கொழும்பு மேல் நீதிமன்ற நிதிபதி தியூடர். பீ:அல்விஸ் 14-8-81 இலும், 1-9-81 இலும் விடுதலை செய்தார்.

ஏனைய நான்கு எதிரிகளுக்கும் எதிரான வழக்கு விசாரணையின் தீர்ப்பு 11-9-81 இல் வழங்கப்படும்,

இவ்வழக்கில் எதிரிகள் சார்பில் திரு.எம். சிவசிதம்பரம்,ஜி.குமாரலிங்கம், எஸ். நவரத்தினம் (கரிகாலன்) கே.வி.எஸ்.ஸ்ரீஸ்கந்தகுமார், கே.வி. தவராஜா ஆகியோர் ஆஜராயினர்.

---


# சுடர்

## ஆடி—ஆவணிஇதழ்வெளிவந்துவிட்டது

பல்சுவை கருத்துக் குவியல்களுடன் சிறு கதைகள் –கவிதைகள்—அரிய பல தகவல்கள்அனைத்தையும் தாங்கி வெளி வந்துள்ளது.

**படிக்கத் தவறாதீர்கள்!**

பிரதி ஒன்றின் விலை ரூபா: 2.00
ஒரு வருட சந்தா ரூபா: 25-00

நிர்வாகி
சிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டட்
194 ஏ, பண்டார நாயக்க வீதி
கொழும்—12


---

## ஆறுமுகம் உயிருடன் எரிப்பு?

எட்டியாந் தோட்டை கணேபல்ல தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களான மாலன், மோகன்,என்போர் எம்பிலிப்பிட்டியாவில் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டு உயிரோடுஎரிக்கப்பட்டது தெரிந்ததே. இவர்களோடு கூடச் சென்ற அதே தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரையும் காணவில்லை. இவரும் மாலன், மோகன், ஆகியோருடன் தீ மூட்டி எரிக்கப்பட்டிருக்கலாம் என்று இப்போது பொலீஸ் கோஷ்டியால் சந்தேகிக்கப்படுகிறது,

# நட்டஈடு கோரி அரசாங்கம் மீது யாழ்மாநகரசபை வழக்குத் தாக்கல்!

## யாழ்ப்பாண எம். பி. யோகேஸ்வரன் 22 இலட்சம் நட்டஈடு கோருகிருர்!

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவர சம்பவத்தின் போது சேதமடைந்த யாழ். பொதுசன நூலகம் மற்றும் யாழ். மாநகரசபையின் சந்தைக் கட்டிடங்களுக்கு 1,26 36,000 ரூபா அரசின்பிரதிநிதியான சட்டமாஅதிபரிடமிருந்து நஸ்டஈடு கோரி யாழ், மாநகரசபை யாழ், மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல்செய்தது-

யாழ். மாநகரசபைக்காக இவ்வழக்குமனுவை சட்டத்தரணி செ, சந்திரகாசன், சட்டத்தரணி எஸ்.எஸ்,எம் சதீது சட்டத்தரணி பி. நவரத்தினராசா கியூ.சி- ஆகியோர் தயாரித்துநெறிபடுத்தியுள்ளார்கள்.

இவ்வழக்கு மனுவை சட்டத்தரணி த.சோமசுந்தரம் நேற்று யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்,

மனுவில் கூறப்பட்டிருப்பதாவது:

:"1981மே 31.ந் திகதி இரவு யாழ்- பொலிஸ்உத்தியோகத்தர்களுக்கு உதவியாகஅனுப்பப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தர்களும் ஏற்கனவேஇருந்த பொலீஸ் உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்தும்.கருத்தொருமித்தும் பலாத்காரம் விஷமத்தனம், தீயிடல் கட்டுக்கடங்கா நாசவேலைஆகியவற்றை புரிந்ததன்மூலம் வழக்காளியின் ஆதனமான யாழ் மாநகரசபையின் பஸ்நிலைய சந்தை கட்டிடத்துக்கு அடாத்தாகவும் சட்டத்திற்கு விரோதமாகவும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளார. இதன் இழப்பு ரூபா 1,57.500என வழக்காளி மதிப்பிடுகிருர்.

"இலங்கை அரசின் கீழ் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின்மேற்குறித்த செயல்கள் அவர்களது வேலை நேரத்திலும் வேலைவரம்புக்குள்ளும் புரியப்பட்டது குறித்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் மேற்குறித்த செயல்களுக்கு இலங்கை அரசே சட்டத்தின் கீழ் பொறுப்பாகும்.

"யாழ்ப்பாணம்நவீன சந்தை முதலாம் இரண்டாம் கட்டடங்களுக்குரூ.125000 சேதம் என வழக்காளியால் மதிப்பீடுசெய்துள்ளது.

"யாழ் மாநகர பெரிய கடை சந்தைக்கு அடாத்தாகவும். சட்டவிரோதமாகவும்சேதத்தைஏற்படுத்தியுள்ளனர் 46000 ரூபா சேதம் எனஇது மதிப்பிடப்பட்டுள்ளது.

"யாழ்நகர பழைய சந்தைக்குசேத'ம் ஏற்படுத்தியுள்ளனர், இதன் சேதம் ரூ. 8000என மதிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர் சிலர் ஒன்றிணைந்தும், கருத்தொருமித்தும்பலோற்காரம் விஷமத்தனமானதீயிடல்,கட்டுக்கடங்கா நாசவேலை ஆகிய செயல்களை புரிந்தததன் மூலம் வழக்காளிக்கு சொந்தமான யாழ். மாநகர பொதுசன நூலக கட்டடம் தளபாடம் மின் இணைப்பு பெறுமதிமிக்கபுத்தகங்களுக்கு அடாத்தாகவும் சட்டத்திற்கு விரோதமாகவும், சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர். இந்த சேதத்திற்கு 1,17,00,000 ரூபாவழக்காளியால் மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது.

"எனவே எதி ராளிக்கு எதிராக 1,26,36.000 ரூபாவையும்வட்டியையும்கோட்டுசெலவும் வழங்க வேண்டும் என தீர்ப்பளிக்குமாறு வழக்காளி கோருகிருர்.


யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தின்போது சேதமடைந்தவீடு வாகனங்கள் தளபாடங்கள், ஆபரணங்களுக்கும். மன,உடல் உலைச்சலுக்கும் 22லட்ச ரூபா அரசின் பிரதிநிதியான சட்டமா அதிபரிடம் கோரி யாழ் எம். பி. திரு. வெ, யோகேஸ்வரனும் திருமதி ச, யோகேஸ்வரனும் யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஆர். பால சுப்பிரமணியம்மூலம் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கின் மனுவைசட்டத்தரணி செ. சந்திரகாசன், சட்டத்தரணி பி. நவரத்தினராசா கியூ சி.ஆகியோர் தயாரித்து நெறிப்படுத்தினர்.வழக்கு மனுவில் கூறப்பட்டிருப்பதாவது:

ஸ்ரீலங்கா அரசின் ஊழியரான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தபோதும் கடமைக்குட்பட்ட செயலில் ஈடுபட்டிருந்தபோதும்வழக்காளிகள் வசித்துவந்த யாழ். பருத்தித்துறைவீதியிலுள்ள ஆதனத்திற்கும் தளபாடத்திற்கும்,ஆபரணங்களுக்கும் மோட்டார் ஜீப் வாகனங்களுக்கும் 'சேதம்ஏற்படுத்தி உள்ளனர்,இதன்சேதம்இருபதுலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது:

குறித்த பொலீஸ் உத்தியோகத்தர்கள்குறித்தவழக்காளிகளை கொலை செய்து அவர்களின் உடல்களைநெருப்பிற்குள்போடவும் எத்தனம் செய்தார்கள். இதனுல் ஏற்பட்ட மன உடல் உலைச்சலுக்குநஷ்டஈடாகஇரண்டு இலட்சம்ரூபா வழங்கப்படவேண்டும்.

ஸ்ரீலங்கா அரசுவழக்காளி போன்றவர்களுக்கும் பாதுக்காப்பு அளிக்க கடமையுடையவர்கள். அப்படியான பாதுகாப்பு அளிக்க தவறியதால் மேற்குறிப்பிட்டசம்பவம் ஏற்பட்டது இதற்கு பொறுப்புஅரசே. பொலிஸ் உத்தியோகத்தர் அரசின் ஊழியர்கள் ஆனபடியால் அரசின் பிரதிநிதியான சட்டமா அதிபரை 22 லட்சம் நஷ்டஈடு வழங்குமாறும் மேற்குறித்ததொகைகொடுக்கும்வரைமாதம் 15,000 ரூபாநஷ்டஈடுவழங்கவேண்டும் என்றும் தீர்ப்பளிக்குமாறு கோருகிருேம்.



அம்பாறை மாவட்டத் தமிழர்கள் கலவரத்தால் பாதிக்கப்பட்டவேளையில், அவர்களுக்கு உதவிபுரிந்ததற்காக நடுக்காட்டில் வைத்து தாக்கப்பட்ட அம்பாறை மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் கந்தையா வேல்முருகு, மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காட்சி.

# இந்திராவுக்கு யாழ் மாநகர சபை பாராட்டும் நன்றியும்!

அண்மையில் தென்னிலங்கையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட பயங்கரவாதத்தால், இத்தீவின் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களும் இலங்கையின் பூர்வகுடித் தமிழ் மக்களும், கொலை, கொள்ளை தீவைப்பு, போன்ற படுபாதகச் செயல்களால் ஒடுக்குமுறைக்கு ஆளான போது இப்பிரச்சினையில் மனிதாபிமானத்துடனும், அக்கறையுடனும் நடவடிக்கை எடுத்ததற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு இலங்கை வாழ் தமிழர்களின் சார்பில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும்தீர்மானம் யாழ்ப்பாண மாநகர சபைக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது-

இப்பிரச்சினையில் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரலெழுப்பி, திருமதி காந்தியின் கவனத்தை ஈழத்தமிழர்களின் வேதனையின் பால் திருப்பி விடுவதற்கு தமிழ் நாட்டில் பல்வேறுநடவடிக்கைகளையும் மேற்கொண்ட தமிழக முதல்வர் எம்-ஜி. ஆர் திமுக தலைவர் கலைஞர் கருணுநிதி தமிழக இளைஞர் காங்கிரஸ் உட்பட தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளுக்கும் தமிழக மக்களுக்கும் தமிழகமாணவர்க்கும்பாராட்டுத் தெரிவிப்பதென்றும் யாழ் மாநகரசபை தீர்மானித்துள்ளது.

### பத்திரிகைத் தணிக்கை

அவ்சரகாலச் சட்டத்தின் கீழ் 21.8.81 பிற்பகலிலிருந்து பத்திரிகைத் தணிக்கையை அரசாங்கம் அமுலுக்குகொண்டுவந்துள்ளது.

# "வவுனியா கொக்கச்சான் குளத்தில் வெளிமாவட்ட மக்களின் குடியேற்றத்தை தடைசெய்யவேண்டும்"

## வவுனியா மாவட்ட சபைக் கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா வடக்குதமிழ் உதவி அரசாங்க அதிபர்பிரிவின் கீழ் அடங்கும்கொக்கச்சான் குளத்தில்வெளிமாவட்டத்தினரைக் குடியேற்றுவதை தடைசெய்யக்கோரும் பிரேரணை வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது,

அண்மையில் திட்டமிடல் பணிமனையில் மாவட்டசபைத் தலைவர் மு, சிற்றம்பலம்தலைமையில் கூட்டம் நடந்தது. அப்பொழுது மேற்படி பிரேரணையை தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் சபையில் சமர்ப்பித்தார்-

'கொக்கச்சான் குளம்' நெடுங்கேணி ஆகியன தமிழ் உதவியரசாங்க அதிபர் பிரிவின் கீழ் அடங்குகின்றன. இங்கு வெளிமாவட்டத்து மக்களைக் கொண்டுவந்துகுடியேற்றுவதை உடனடியாக தடைசெய்யவேண்டும்- இங்குள்ள காணிகளுக்கு விளம்பரமூலமாக மனுக்கள்கோரி காணிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். விண்ணப்பங்கள் தெரிவின் போது நெடுங்கேணி தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும், மிஞ்சிய காணிகளை வவுனியா மாவட்டத்தில் வாழும் மக்களுக்கே பகிர்ந்தளிக்க வேண்டும்' வெளிமாவட்டத்தினர்களுக்குஇங்கு காணி வழங்கப்படக்கூடாது' என்று திரு. சிவசிதம்பரம் தமது பிரேரணையை சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினுர்.

'கொக்கச்சான் குளநிர்வாகக் கடமைகளில் வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர்பிரிவுதலையிட்டுக் கடமையாற்றுகின்றது. இதனை வவுனியா (நெடுங்கேணி) வடக்கு தமிழ் உதவியரசாங்க அதிபர் பிரிவுஆட்சேபித்துள்ளது.

கொக்கச்சான் குளத்தில் இருந்து ஒன்றரை, இரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் மாவட்ட எல்லை உண்டு. எல்லையை மீறி சிங்களஉதவிஅரசாங்க அதிபர் பிரிவுக்கு நிர்வாகக் கடமைகளை ஆற்றுமாறு அதிகாரம்வழங்குவது நீதியற்றது. பாராளுமன்றத்தில் விவாதத்தின் பின்அங்கீகாரம் பெற்றுல் ஒழிய இத்தகைய நடவடிக்கையைமேற்கொள்ளமுடியாதுஅவ்விதம் செய்வது சட்டத்துக்கு விரோதமானதாகும்.

அண்மையில் இப்பகுதிக்கு விஜயம் செய்த கைத்தொழில்விஞ்ஞானத்துறைஅமைச்சர் திரு. சிறில் மத்தியூ இங்கு புகையிலை உற்பத்தி மேற்கொள்ளப்படும் என்றும், வெளி மாவட்டத்திலிருந்து சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியேற்றுவது என்றும் தெரிவித்துள்ளார். அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பகுதியில் 9 குடும்பங்கள் மட்டுமே குடியிருக்கின்றன- ஆனுல்46 குடும்பங்கள் அங்கு குடியேறி வசித்துவருவதாக வவுனியா தெற்கு சிங்கள உதவிஅரசாங்கஅதிபர் பிரிவு தெரிவித்துள்ளது-

கடந்த 15 வருட காலத்திற்குள் இப்பகுதியில்யாராவது காடுகளை அழிக்கவும் இல்லை, குடியேறவும் இல்லை. இதுதான்உண்மைநிலை" என்றும் திரு. சிவசிதம்பரம்கூறினுர்.

"நான் யாரையும் குறைகூறவில்லை. எவரும்தத்தமது மதத்திற்குரிய புராதன அழிவுகளைப் பேணிப்பாதுகாப்பதையோ, அவற்றைப் பராமரிப்பதையோ.நாங்கள் மறுக்கவில்லை தடுக்கவில்லை. ஆனுல் அத்துமீறிய வெளி மாவட்டத்தினரின்குடியேற்றம் இப்பகுதிகொக்கச்சான் குளத்து மக்களிடையே ஒரு பதட்ட நிலையை உருவாக்கியுள்ளது- எனவே இந்த நடவடிக்கை தடுக்கப்பட்டு அமைதியுடன் அவர்கள் வாழ வழிசெய்யப்படவேண்டும்" என்றும் அவர் சொன்னுர்,

# ஈழம்வேண்டுமா உங்களுக்கு?

## வன்முறையால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளியிடம் ஜனாதிபதி ஜே. ஆர். கேள்வி

அண்மையில் பயங்கரவாதத்தினால் மிகவும்மோசமாகப் பாதிக்கப்பட்ட மலையகத்தோட்டங்களில்ஒன்று பெல்மதுலை நீல காமம் தோட்டம். இத்தோட்டத்தில் பாதிக்கப்பட்ட இரு தமிழ்த் தொழிலாளர்களான சுப்பன் (வயது57) அவருடைய மகன் பண்டாரம் (வயது 28) ஆகியோருடன் தமிழில் உரையாடினாராம் ஜனாதிபதியும் பிரதமரும்.

அவர்களிடம் சிறீலங்கா ஜனாதிபதிசிரித்தபடி கேட்ட ஒருகேள்வி— உங்களுக்கு ஈழம் வேண்டுமா? என்பதாகும்.

அதற்குச் சுப்பன், "ஈழம் எங்களுக்கு எப்படித் தெரியும் தொரைங்களே, ஐம்பது வருடமாகநாங்கள்இத் தோட்டத்திலேயே தான் இருக்கோம்"என்று பதிலளித்தான்,

"பிரஜாவுரிமை இருக்கிறதா?—இதுதான் உங்கள் சொந்த ஊரா? என்றுபிரதமர் கேள்விகளை அடுக்கிய போது, பிரஜாவுரிமை விசாரணைக்குப் போய்வந்தோம்: இதுதான் நம்மூர் இதைவிட வேறு எங்களுக்கு எங்கேயிருக்கு வேறு ஊர் தொரை" என்று தொழிலாளர்கள்பதிலளித்துள்ளனர்.

12 பவுண் தங்க நகைகள் வெண்கலச்சாமான்கள் ஆடுகள் கோழிகள் எல்லாவற்றையும்பயங்கரவாதிகொள்ளையடித்துச் சென்று விட்டதாக மேற்படி இரு தமிழ்த் தொழிலாளர்களும் முறையிட்டபோது. "உங்களுக்கு கோழி தாரது—முட்டையும் தாரது" என்று கொச்சைத் தமிழில் கூறினாராம் ஜனாதிபதி.

(ஆதாரம்: தினபதி-டெயிலிநியூஸ் 4-9-81)

---

## புஞ்சிநிலமே புலம்புகிறார்

பிரதிபிரதேசஅபிவிருத்தி அமைச்சராக இருந்து அண்மையில் அமைச்சர் பதவியிலிருந்து ஜனாதிபதி ஜெயவர்த்தனாவால் வெளியேற்றப்பட்ட இரத்தினபுரி எம். பி, திரு, புஞ்சி நிலமே ஐக்கிய தேசியக் கட்சியிலேயே தொடர்ந்தும் அங்கம் வகிக்கிறார்- அவர், 4-9-81 இல் நடைபெற்ற ஐ தே.க, நிர்வாகக் குழுக்கூட்டத்தில் பின்வருமாறு புலம்பியுள்ளார்,

"இனவாதிகள் யார்? இனவாதத்தின் பேரால் சுய அரசியல் லாபம் தேடுபவர்கள்யார்?நாமல்ல- தமிழர் விடுதலைக் கூட்டணியினரே. இரண்டுபேர் சண்டைபிடித்துக் கொண்டால் தமிழன் தாக்கப்பட்டான் என்று வெளிநாடுகளில் பிரசாரம் செய்கின்றனர்- தமிழர்கள் இங்கு எம்மிடம் ஐக்கியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று கூட்டணியினரோ, தமிழர்புறக்கணிக்கப்படுகின்றனர் என்று பிரசாரம் செய்கின்றனர், இவர்களின் இனவாதசெயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்"

## கன்னங்கரா கதறல்

பண்டார கமையைச்சேர்ந்த ஐ-தே.க. நிர்வாக குழு உறுப்பினர் திரு, கன்னங்கரா இக்கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:-

"கோட்டை முதல் இரத்மலானை வரை பாருங்கள் தமிழர்களே அதிகம். வர்த்தகத் துறையில் மட்டுமல்ல-ஏனைய துறைகளிலும் அவர்களே இருக்கின்றனர். கொடுக்கக் கொடுக்க உரிமைகளைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருக்கின்றனர் இதற்கோர் முடிவு இல்லையா? வடக்கில், கிழக்கில், வவுனியாவில் என்ன நடக்கிறது? அங்கும் நம் மக்கள் (சிங்களவர்) ஒதுக்கப்படுகின்றனர். பயங்கரவாதம் தலை தூக்கியுள்ளது. அரசு ஆயுதப்படைகளின் ஆட்சியை அங்கு ஏற்படுத்த வேண்டும்"

---

—1ம்- பக்கத் தொடர்

டித்து ஊர்வலம் ஒன்றை நடத்தி ஒருநாள் உண்ணாவிரதமும அனுட்டித்தனர் திரு-ஏ. ஷேக் மரைக்காயர் தலைமையில் புதுவைசட்டப்பேரவைக்கு முன்னால் உண்ணாவிரதம் இடம்பெற்றது.

## கருணாநிதி அறிவிப்பு!

இலங்கைத்தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து செப்டம்பர் 3 ஆம் திகதி முதல் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15வரை சென்னையிலுள்ளஇலங்கைத் துணைத்தூதரகத்தின் முன்னால் தொடர்ந்து தடையை மீறி ஊர்வலமும் மறியலும் நடைபெறும் என்று அறிவித்துள்ளார்,

ஈழத் தமிழர்களுக்காக திராவிட முன்னேற்றக்கழகம் முதனாள்நடத்திய மறியற்போராட்டத்தில்3சட்டமன்ற உறுப்பினர்களுட்பட 157பேரும்— இரண்டாம் நாள் போராட்டத்தில் 53 பேரும் மூன்றாம்நாள் போராட்டத்தில் 17 பேரும் கைது செய்யப்பட்டு இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்-

## மறியல் விபரம்

திமுக போராட்டத்துக்குத் தலைமை தாங்குவோர் விபரம் வருமாறு:—

3,9.81—முன்னாள் மேயர் மைனர் மோசஸ்

4.9,81— திருவல்லிக்கேணிச் செயலாளர் மாணிக்கம்;

5.9-81—ரகுமான்கள்எம்: எல்.ஏ. தலைமை,

7:9,81—சோ. இ மூர்த்தி சி, என். ரத்தினம் தலைமை.

8,9.81—ப. பொன்னுரங்கம் எம்- எல்.ஏ.

9.9.81...தலைமை நிலைய வழக்கறிஞர் டி.பி. ராதாகிருஷ்ணன் தலைமை.

10.9.81— துறை முகப் பகுதிச் செயலாளர் பலராமன் தலைமை.

11;9.81—எஸ். பாலன் எம்.எல்.ஏ. தலைமை.

12.9.81—ஹர்த்தால்

14.9.81— தொழிலாளர் அணிச்செயலாளர் மா.வெ. நாராயணசாமி தலைமை.

15,9.81—அண்ணாபிறந்த நாளன்று திமுக தலைவர் கருணாநிதி தலைமை-

## பம்பாயில் கலைஞர் பேச்சு

உலகெங்கிலும் ஏழுகோடித் தமிழர்கள்சிதறிக்கிடக்கிறார்கள்எந்தநாட்டில்அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டாலும் அதைக் கண்டிக்கும்உரிமைபடைத்த உலகத்தமிழர். பேரியக்கம் ஒன்றுதொடங்கப்படவேண்டும் என்று பம்பாய் தமிழ்ப் பேரவைக் கூட்டத்தில் பேசிய கலைஞர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்;

## சென்னை மருத்துவ கல்லூரி மாணவர் உண்ணாவிரதம்

இலங்கைத் தமிழர் மீது கையாளப்படும் இனக் கொலை நிகழ்ச்சிகளைக் கண்டித்து சென்னை மருத்துவ கல்லூரி மாணவர்கள் மேற்படி கல்லூரி நுழைவுவாயிலில் தமிழ்நாடு— பாண்டிச்சேரி மருத்துவ கல்லூரி மாணவர்பேரவைத்தலைவர் தலைமையில் 2.9.81 காலை 9க்கு உண்ணாவிரதம் இருந்தனர். இந்த உண்ணாவிரதத்தைக் கலைஞர் கருணாநிதி தொடக்கிவைத்தார்.

## மாணவர் பொது மன்றம் ஊர்வலம்!

இலங்கைத் தமிழர் மீது மிருகத்தனமான தாக்குதல் நடைபெற்றதை எதிர்த்து 3.9.81 காலை 10 மணிக்கு தமிழக மாணவர் பொது மன்றத்தின் சார்பில் ... ரும் மாணவர் பேரவை ... ன்று ஊர்வலமாகப் புறப்பட்டு இலங்கைத் தூதரகத்தையடைந்து மகஜர் ஒன்றைக் கையளித்தது.

## அனைத்துலக விசாரணை வேண்டும்!

இலங்கைத் தமிழருக்கு எதிரான கொலை கொள்ளை கற்பழிப்பு தாக்குதல் பற்றிப்பாரபட்சமற்ற விசாரணை நடத்தவும் தமிழர் பிரச்சினைகு தீாவுகாண ஆலோசனைகளைப் பரிந்துரை செய்யவும்அனைத்துலகவிசாரணைக்குழுவொன்றை சிறீலங்கா அரசுநியமிக்கவேண்டுமென்றும் மேற்படி குழு ஆறுமாதத்தில் அதன்அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும்இலங்கையையும் இந்தியாவையும் சேர்ந்த மாணவர்கள் சிறீலங்கா தூதரகத்திடம்ஒருமித்துக்கோரியுள்ளனர்-

## விருத்தாசலத்தில்

3.9.81 மாலை தமிழகத்திலுள்ள விருத்தாசலம் பேருந்து நிலையத்தில்,இலங்கைத் தமிழர்களுக்கு நீதி வழங்குமாறு கோரிமாணவர் திமுக சார்பில் பேரணியொன்று நடைபெற்றது. மாவட்ட மாணவர் திமுக அமைப்பாளர் பொன்- சொ, தியாகராஜன் தலைமையில் நடைபெற்றஇப்பேரணியில்மாணவர் திமுகசெயலாளர்வேலு கே- விஜயகுமார். வி, நாகராசன் உட்பட அனைத்து இளைஞர் அமைப்புக்களும் திராவிடர்கழக அமைப்புக்களும் கலந்து கொண்டனர்-

## அமைச்சர் சோமசுந்தரம் வேண்டுகோள்

இலங்கைத்தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளை எதிர்த்தும் அவர்களுக்குநிம்மதியான வாழ்வும் நீதியும், கிடைக்கச் செய்யவும் இந்தியாவின் சகல மாநிலங்களும் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டுமென்று தமிழ் நாடு வருவாய்த்துறை அமைச்சர் எஸ்-டி. சோமசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 12ஆம் திகதி ஹர்த்தால்

தமிழ் நாட்டில் 8.9-... இல் நடைபெறவிருந்த அ...த்துக்கட்சிகளின் ஹர்த்... அன்னை வேளாங்கண்... கோவில் திருவிழா கா...மாக12-9;81சனிக்கிழ...குத் தள்ளி வைக்கப்...தாக முதல்வர் எம்.ஜி.ஆ... அறிவித்தார்.

## புதுவையில் வழக்கறிஞர்கள் பகிஷ்கரிப்பு!

புதுச்சேரி மாநிலத்திலுள்ளவழக்கறிஞர்கள்அனைவரும் இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டித்து 1,9.81 செவ்வாயன்று நீ... மன்றங்களைப் பகிஷ்கரித்...னர்- அவர்கள் புதுவை... நில முதல்வர் டி. இராம...சந்திரனுக்கும் இந்தியப்...தமருக்கும்எழுதியுள்ள ...தமொன்றில்மனிதாபி... அடிப்படையில் இலங்கை... தமிழர் பிரச்சினையில் தலை...டுமாறு கடிதம் எழுதியுள்ள...னர்.

## ரகுமான் கான் கைது!

இலங்கைத் தமிழர் இன்னலைத் துடைத்திட இந்திய அரசு நடவடிக்கையெடுக்கும்படிகோரி திராவிட முன்னேற்றக் கழகம் 5-9-81 சனிக்கிழமை சென்னையில் நடத்திய நான்காவது நாள் மறியற்போராட்டத்தில்கழகத்தைச் சேந்த சட்டமன்ற உறுப்பினர் திரு- ரகுமான்கான் உட்பட 13 கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

---

# அமெரிக்கத் தூதுவரை நியமிக்க இந்தியா தடை

ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவுக்கு வேவு பார்த்தவர் என்று கருதப்படும்திரு. ஜோர்ஜ் கிரிபின் இந்தியாவின் தூதுவராகஅமெரிக்கா நியமிப்பதை இந்தியாதனது வீட்டோ அதிகாரத்தைப் பயன் படுத்தித் தடை செய்து விட்டது-

இதே வேளையில் வாஷிங்டனிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு இந்திய ராஜதந்திரி ஒருவரை நியமிப்பதை அமெரிக்காமறுத்துள்ளதாக இந்திய அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

# பிரதி அமைச்சருக்கு நூறு ரூபா அபராதம்!

பிரதி கலாசார அமைச்சரும் கலகெதற (யூ.என்-பி') எம். பியுமான டபிள்யூ.எம். ஜி,ரி, பண்டாவுக்கு கண்டி நீதிவான் திரு-கே.ரி. சித்திரஸ்ரீ. நூறு ரூபா அபராதம் விதித்தார்.

இ.போ.ச. சாரதியொருவருக்கு 1980 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி சிறுகாயம் விளைவித்ததாகப் பிரதியமைச்சர் மீது சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த அபராதம் நீதிவானால் விதிக்கப்பட்டது.

---

# 70 வயது முதியவரும் பயங்கரவாதியா?

இணுவிலைச் சேர்ந்த 70 வயது நிரம்பப் பெற்றவிவசாயியான முதியவர்ஒருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். தம்பு என்ற பெயருடைய இந்த முதிய விவசாயி கூட ஒரு பயங்கரவாதியா என்று கேட்கப்படுகிறது.

---

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ்லிமிட்டட்டாரால், யாழ்ப்பாணம், மகாத்மாகாந்திவீதி,15-ஆம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1981-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9-ஆம் திகதிபுதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.